Crl.Misc.39

D E P O S I T I O N  O F  W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.22/2025

**P.W**.3(LW8)

| | |
|---|---|
| Name | : **திரு.அன்புமணி** |
| Father/Husband Name | : திரு. சண்முகம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.07.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது கானத்தூர் கிராமத்தில் குடியிருந்து மீன்பிடி தொழில் வேலை செய்து வருகிறேன். சாட்சி முருகன் என்பவர் என் நண்பர் ஆவார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகஜரிலும் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

2) கடந்த 07.11.2024ம் தேதி நான் என் சொந்த வேலை காரணமாக கல்பாக்கம் சென்றுவிட்டு திரும்ப வந்துக் கொண்டிருந்த போது புதுப்பட்டினம் அருகே போலிசார் விசாரணை செய்துக் கொண்டிருந்தார்கள். அப்போது நானும், முருகனும் சென்று என்ன விஷயம் என்று கேட்டபோது திருட்டு சம்மந்தமாக விசாரணை செய்துக் கொண்டிருப்பதாக சொன்னார்கள். ஆஜர் எதிரி தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்யப் போவதாகவும் அதில்

சாட்சியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். எதிரி தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி கடலூர் சின்னகுப்பம், கானாத்தூர் கிராமம், கானாத்தூர் அங்காளம்மன் குப்பம் ஆகிய இடங்களில் தங்க நகைகளை திருடியதாகவும் அந்த நகைகளை ஒரு நகை கடையில் அடமானம் வைத்துள்ளதாகவும் சொன்னார். அவர் சொன்னபடி அந்த கடைகளை சென்று அடையாளம் காட்டினார். இது சம்மந்தமாக நான் ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகஜரிலும் கையொப்பம் செய்தேன். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் அசா.ஆ.2 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன**). போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,**

நான் கல்பாக்கத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 10 மணிக்கு சென்றேன். கல்பாக்கத்திலிருந்து போலிசார் விசாரணை செய்தததாக சொல்லப்படும் இடத்திற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 150 மீட்டர் தூரம் இருக்கும். நகை திருட்டு சம்மந்தமாக புகார் கொடுத்த விவரம் எனக்கு முன்பே தெரியும் என்றால் சரிதான். புகார்தாரர் தரப்பில் குணசேகரன் என்பவரும் ஒருவர் என்றால் சரிதான். குணசேகரன் என்னுடைய தம்பி என்றால் சரிதான். கல்பாக்கத்திற்கு நான் மட்டும் தான் சென்றேன். சாட்சி முருகன் என்னுடன் என்னுடைய வண்டியில் வரவில்லை என்றால் சரிதான். சாட்சி முருகன் அந்த இடத்திற்கு எவ்வளவு நேரம் கழித்து வந்தார் என்றால் சுமார் 5 நிமிடங்களுக்குள் வந்தார். நான் சென்றபோது அந்த இடத்தில் எத்தனை போலிசார் இருந்தார்கள் என்றால் 4 போலிசார் இருந்தார்கள். அவர்கள் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் போலிசார் என்று எனக்கு தெரியும்.

அந்த இடத்தில் ரவீந்திரன் இருந்தார். நானும், முருகன் மற்றும் 4 போலிசார் தவிர மற்ற நபர்கள் யார் இருந்தார்கள் என்றால் நான் பார்க்கவில்லை. அந்த இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் கூல்ரிங்ஸ் கடை அருகே 10 நிமிடம் இருந்தோம். கூல்ரிங்ஸ் கடையிலிருந்து நான் கூவத்தூர் சென்றுவிட்டேன். கூவத்தூர் காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை கூவத்தூரில் என் வீட்டிற்கு சென்றேன். நான் கூல்ரிங்ஸ் கடை அருகே கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் பஞ்சாயத்திற்கு சென்றபோது கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்த தாளில் எழுதப்பட்டிருந்ததா அல்லது வெறும் தாளில் கையொப்பம் செய்தேனா என்றால் என் வீட்டருகே வந்து எழுதப்பட்ட தாளில் கையொப்பம் செய்தேன். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்கிற விவரம் எனக்கு தெரியாது. நான் எத்தனை கையொப்பங்கள் போட்டேன் என்றால் 2 அல்லது 3 கையொப்பங்கள் போட்டேன். நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் புகார்தாரர் என்னுடைய சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு நீதிமன்றத்தில் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

D E P O S I T I O N O F W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.
Case No. CC.22/2025
**P.W**.4(LW9)

| | |
|---|---|
| Name | : **திரு.முருகன்** |
| Father/Husband Name | : திரு. சந்திரன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.07.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது கானத்தூர் கிராமத்தில் குடியிருந்து எலக்ட்ரிஷியனாக வேலை செய்து வருகிறேன். சாட்சி அன்புமணி என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகஜரிலும் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

2) என்னுடைய தங்கை வீட்டில் நகை திருட்டு குறித்து கேள்விப்பட்டு அவரது வீட்டிற்கு நான் சென்றிருந்தேன். கடந்த 11.07.2024ம் தேதி ஆஜர் எதிரியின் வீட்டிலிருந்து நகையை கைப்பற்றினார்கள். அப்போது நான் கையொப்பம் செய்தேன். எனக்கு முன்பு அன்புமணி என்பவர் கையொப்பம் செய்தார். எதிரி வீட்டிலிருந்து நகை கைப்பற்றியபோது தான் நான் பார்த்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

என் தங்கையின் வீட்டில் நகைகள் காணாமல் போய்விட்டது சம்மந்தமாக தகவல் கிடைத்தது என்றால் நகை திருட்டு சம்மந்தமாக புகார் கொடுக்க போகும் போது நான் சென்றிருந்தேன். அப்போது தெரிந்துக் கொண்டேன். எத்தனை மாதங்களுக்கு முன்பு புகார் கொடுத்தார்கள் என்றால் 28.09.2024ம் தேதி புகார் கொடுத்தார்கள். புகார் கொடுத்ததற்கும், நகை கிடைத்த தேதிக்கும் இடைப்பட்ட காலத்தில் போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு நான் சென்றபோது போலிசார் அங்கிருந்தார்கள். எத்தனை பேர் அங்கிருந்தார்கள் ஊர் பொதுமக்கள் பலர் அங்கிருந்தார்கள். போலிசார் வந்த பிறகு எவ்வளவு நேரம் கழித்து நான் அங்கு சென்றேன் என்றால் ½ மணி நேரம் கழித்து சென்றேன். நான் அந்த இடத்திற்கு முன்பே போலிசார் விசாரணை செய்துக் கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். நான் செல்வதற்கு முன்பு யார் யாரை விசாரணை செய்தார்கள் என்கிற விவரம் எனக்கு தெரியாது. நான் ஒரு கையெழுத்து தான் செய்தேன். நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்கிற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்த பிறகு வேறு எந்த இடத்திலாவது என்னையும் என்னுடன் சேர்ந்து மற்றவர்களையும் சேர்ந்த விசாரணை செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் புகார்தாரர் என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு நீதிமன்றத்தில் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.